Madras Information

CONNEMARA PUBLIC LIBRARY
22 FEB 1968
MADRAS

January 1968

Price 20 P.



Twenty-five members of National Unic
of Tamil School Teachers of Malay
met Thiru M. Muthuswamy, Ministe
for Local Administration, at h
Chamber on 4th December 1967



Mr. A. G. Samoy, Economic Editor
"De Nieuwe Gids" a leadi
Belgian daily, met Thi
C. N. Annadurai, Chief Minister,
his residence on 5th December 196



Senator Allen Joseph Ellender
Louisiana, U.S.A., met Th
C. N. Annadurai, Chief Minist
at his residence on 12th Decemb
1967. Picture shows the Sena
in conversation with the Ch
Minister and Thiru A. Govin
samy, Minister for Agriculture

CONNEMARA PUBLIC LIBRARY
22 FEB 1971
MADRAS

MADRAS INFORMATION

Vol. XXII JANUARY 1968 No. 1

CONTENTS

	PAGE
1. திருப்போரூர் வாழ்வு	3
2. March towards Prosperity Brigade's	10
3. Municipal Administration at the Cross Roads .. —*Thiru M. Muthuswamy, Minister for Local Administration.*	13
4. Save This Way and Reduce Your Income-Tax ..	16
5. Tamil Literature	20
6. National Prosthetist and Orthotist Training Centre ..	22
7. City Drainage System to be improved	24
8. Cadastral Survey—A view point .. .. .. —*Lt.-Col. Agarwal, B.E. (Civil) (Hons.) M.S.C., Ph.E. (I.T C.), A. M.I.E., Head of Photogrammetric Division, Indian Photo-Interpretation Institute, Survey of India.*	27
9. The Indomitable Sardar	34

SV2K 175973
5B114

why purchase AGMARK products?

AGMARK seal certifies the purity and quality of the product on which it is pasted. This is a Government Label given for agricultural and allied products such as ghee, butter, eggs, honey etc. after scientific testing. ■ When you buy Agmark, you have a guaranteed product which is graded, packed and marketed by the strictest scientific standards.



AGMARK IS THE HALLMARK OF QUALITY

davp 67/375

175973
5 B11md

...MBARA PUBLIC ... 22 FEB 1968 ... MADRAS

சிறப்போடு வாழ...

...MBARA PUBLIC ... 22 FEB 197... MADRAS

தமிழகக் கல்வி-தொழில் அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிறுவனர் நாள் விழாவில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்டது.

அன்பிற்குரிய இணைவேந்தர் அவர்களே! அறிவு சான்ற துணைவேந்தர் அவர்களே! பெருமதிப்பிற்குரிய பேராசிரியப் பெருமக்களே! அன்புகெழுமிய மாணவி—மாணவ நண்பர்களே!

அறிவையும், ஆற்றலையும் ஓரளவு எனக்கு அளித்து என்னை ஆளாக்கிவிட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய அண்ணல் அண்ணாமலை அரசரின் அருமை பெருமைகளை நினைவுப்படுத்திக்கொள்ளும் நிறுவனர் நாள் விழாவில், கலந்துகொள்ளும் பேறு பெற்றமைக்குப் பூரிப்படைகிறேன்; பெருமைப்படுகிறேன். நான் பெற்றுள்ள அறிவும், ஆற்றலும் அளவிலே சிறியவை தாம் என்றாலும், அவற்றை எனக்கு அளித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பெருமையை எண்ணி எண்ணிப் பெருமிதவுணர்வு கொள்கிறேன். இந்தப் பெருவிழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பினையும், உங்களோடு கலந்து அளவளாவி மகிழும் வாய்ப்பினையும், அளித்த பல்கலைக் கழகத்தார்க்கு என் உளங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதும் அறியாத எளிய மாணவனாக இந்தப் பல்கலைக் கழகத்தில் நான் படிக்க நுழைந்தபோது, இப்படிப்பட்ட வரவேற்பும், வாழ்த்தும், பாராட்டுதலும், போற்றுதலும் எனக்குக் கிடைக்குமென்று நான் எள்ளளவும் எண்ணிய தில்லை. இந்த அளவுக்கு என்னை ஆளாக்கி வளர்த்த பெருமையின் பெரும்பகுதி இந்தப் பல்கலைக்கழகத்தையே சாரும். இந்தப் பல்கலைக் கழகத்தின் சூழல்கள், எனக்குப் போதுமான அளவு அறிவையும், ஆற்றலையும், உணர்ச்சியையும், எழுச்சியையும், ஆக்கத்தையும், ஊக்கத்தையும் ஊட்டியிராவிட்டால், உங்களால் வரவேற்கப் படக்கூடிய ஒரு பெருமித நிலையை நான் எய்தியிருக்க முடியாது. இந்த நிலைக்கு என்னை வளர்த்துவிட்ட இந்தப் பல்கலைக் கழகத்திற்குத் தலைவணங்குகிறேன். எனக்குப் பாடப் பயிற்சியளித்து அறிவுகொளுத்திய பேராசிரியர்கள் சிலரையும் என்கண்முன்னே காண்கி றேன். அவர்களுக்கும் என் நன்றிக் கடனுற்றும் அறி குறியாக வணக்கம் செலுத்துகிறேன்.

வள்ளல் அண்ணாமலை அரசரின் வழித்தோன்ற லாகவும், இப் பல்கலைக்கழக இணைவேந்தராகவும் திகழும் செட்டி நாட்டரசர் உயர்திரு முத்தையா செட்டியார் அவர்களும், துணைவேந்தராக விளங்கும் உயர்திரு சந்திரா ரெட்டியார் அவர்களும் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று அன்பழைப்பு விடுத்தனர். இச் செயல் அவர்கள் என்னிடத்தில் கொண்டிருக்கும் நல்லன்பிற்கும், நான் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்புக்களிடத்தில் அவர்கள் காட்டுகிற பேராதர விற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதாகும். அவர் களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நினைவலைகள்

அண்ணாமலை நகரில் அடியெடுத்து வைத்தவுடன், என் நெஞ்சில் எவ்வளவோ எண்ண அலைகள் எழும்பி வீழ்கின்றன. சோலைகளடர்ந்த இயற்கை அழகும், மாட மாளிகைகள் நிறைந்த செயற்கை வனப்பும், மெல்லிய பூங்காற்றோடு மிதந்துவரும் தமிழிசையும், புலவர் பெரு மக்கள் நிரம்பிய கலையியற்பகுதியும், அறிவியலறிஞர்கள் நிறைந்த அறிவியற்பகுதியும், ஓடிவிளையாடும் விளையாட் டரங்கமும், ஓடம் போகும் ஓடையும், ஒட்டியும் வெட்டியும் சொற்போர் நிகழ்த்தும் பட்டி மண்டபமாம் கோகலே மண்டபமும், சொல்வல்லார் சீனிவாச சாத்திரியார் சிந்தையினிக்கச் செவியினிக்க ஆற்றிய சொற்பொழிவும், சர். கே. வி. ரெட்டியார் அறிவுத்திறனோடு புரிந்த ஆட்சியின் மேன்மையும், பேராசிரியர் இரத்தினசாமி பெருந்தன்மை யோடு வழங்கிய கனிவுரையும், பேராசிரியர் கா. சு. பிள்ளை வெளிப்படுத்திய புலமையும், பண்டிதமணி கதிரேசச் செட்டியார் உதிர்த்த சொல்நயம் மிக்க நகைச்சுவையும் விடுதலை வேட்கையோடு வீறுகொண்டு எழுந்த மாணவரு லகின் அறப்போர்க் கோலமும், எதிர்ப்புகளை வீழ்த்தித் தமிழின் இயக்கத்தை இங்கு நிலைநாட்டிய நிகழ்ச்சியும், பேராசிரியர் மறைமலையடிகள், பெரியார் இராமசாமி, பேரறிஞர் அண்ணா ஆகியோர்களை இதே மண்டபத்தில் நான் மாணவர் மன்றச் செயலாளனாக இருந்து வர வேற்க, அவர்கள் பேருரையாற்றி மகிழ்வித்த காட்சியும், பட்டமளிப்பு விழாத்தோறும் அண்ணல் அண்ணாமலை அரசர் இம்மண்டபத்தில் பெருமித நடைபோட்டுப் புகுந்த மாட்சியும் என் நினைவிற்கு வந்து போகின்றன.

அண்ணாமலை அரசரின் ஈத்துவக்கும் உள்ளத்திலிருந்து உருப் பெற்றெழுந்த இந்தப் பல்கலைக் கழகம், பெயரோ டும், புகழோடும், பொலிவோடும், வலிவோடும் வளர்ந்

தோங்கி வருவது எனக்கும், என்போன்ற எண்ணற் றோர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

> ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்லது
> ஊதியமில்லை உயிர்க்கு

என்றார் வள்ளுவப் பெருந்தகையார். வறியார்க்கு ஈதல் வேண்டும்; அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும்; அப்படிப்பட்ட புகழ் அல்லாமல் வேறெதுவும் உயிர்க்கு ஊதியமாகாது என்பது வள்ளுவரின் வாய்மொழி. அரசர் அண்ணாமலையார் தாம் ஈட்டிய பொருளின் ஒரு பகுதியை இப் பல்கலைக் கழகத்திற்கு ஈந்தார்; அதன் மூலம் புகழ் பெற்றார்; உயிர் வாழ்க்கையின் குறிக் கோளை நிறைவேற்றினார். " அண்ணாமலை சர்வகலாசாலை யின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன். தமிழ் நாடெங்கும் தமிழிசை முழங்க வேண்டுமென்பது எனது ஆவல். ஈட்டலும், காத்தலும், வகுத்தலும், என் வாழ்க்கையின் குறிக்கோள் " என அவர் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருப்பதிலிருந்து அவரது உள்ளக் கிடக்கை எவ்வளவு உயர்ந்து விளங்கிற்று என்பதை உணரலாம்.

கொடையிற் சிறந்தது

அறக்கொடைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்த கொடையாக விளங்குவதும், வேண்டப்படுவதும், கல்விக் கொடையேயாகும். இதுபற்றித்தான் புதுமைக்கவி பாரதி யார் அவர்களும்

> அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆலயம் பதினாயிரம் நாட்டல்
> அன்னயாவினும் புண்ணியங்கோடி
> ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்று கூறினார். அன்ன சத்திரங்கள் ஆயிரங் கட்டு வதனால் ஏற்படும் பலனைவிட, ஆலயங்கள் பதினாயிரம் எழுப்புவதினால் ஏற்படும் பலனைவிட, ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தலினால் ஏற்படும் பலன் மிகவானது என்றார். உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந் தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும் என்னும் கருத்துப்பட,

> " காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது "

என்று வள்ளுவப் பெருந்தகையார் குறிப்பிட்டுள்ளார். அது போல, ஒரு ஏழையின் கல்விக்கு ஒருவர் உதவும் உதவி எவ்வளவு சிறிதளவுடையதாக இருந்தாலும், இந்தக் காலத்தின் அருமையை ஆராயும்போது, அந்த உதவியின் அளவு, ஆயிரம் சத்திரங்களையும், பதினாயிரம் கோயில்களையும் எழுப்புவதற்கு உதவும் உதவியின் அளவைவிட மிகப் பெரியது என்கிறார் பாரதியார்.

இன்றைய நிலையில் உலக நாடுகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு நாடு வாழ்வதும், வளருவதும் அதன் நீளம், அகலம், கனத்தைப் பொறுத்து அமைய வில்லை. ஒரு நாடு நீண்டு, அகன்று மக்கட் பெருக்கத் தோடு பார்ப்பதற்குப் பருத்துக் காணப்பட்டால், அந்த நாடு வாழத்தக்கது என்றும், மற்றொரு நாடு இறுகிச் சுருங்கி, குறைந்த மக்கள் எண்ணிக்கையோடு பார்ப்பதற்கு இளைத்துக் காணப்பட்டால், அந்த நாடு வாழமுடியாது என்றும் எவரும் கூறமாட்டார்கள். சுமார் அறுபத் தைந்து கோடி மக்களைக் கொண்டு பரந்து காணப்படும் சீனாவும் இருக்கிறது, சுமார் பத்துக்கோடி மக்களைக் கொண்டு சுருங்கிக் காணப்படும் சப்பானும் பக்கத்திலேயே இருக்கிறது. ஆனால் வளமான வாழ்விலும், வசதியிலும் சீனாவை மிஞ்சிய நிலையில்தான் சப்பான் இருக்கிறது. இதற்குக் காரணம் பரப்பளவு, மக்கள்தொகை ஆகிய வற்றின் பெருக்கம் அல்ல; அறிவுத்திறன், ஆற்றல் திறன் ஆகியவற்றின் பெருக்கமேயாகும். ஒருநாடு எந்த அளவுக்குத் தன்னுடைய அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் பயன்படுத்தி எல்லா வகையிலும், எல்லா வழியிலும் தன்னிறைவு பெற்று, இயன்றால் பிற நாடு களுக்கும் ஏற்றுமதி செய்து, வருவாய் பெற்று வாழ்கி றதோ, அந்த நாடுதான் சிறப்புற்றுத் திகழக் காண்கி றோம். இரும்புக்கனிகளை வெட்டியெடுக்கும் இந்தியாவை விட, குண்டூசி அளவுக்குக்கூட இரும்பினை வெட்டி எடுக்க முடியாத சப்பான் தொழில் வளர்ச்சியிலும் வாணிக வளர்ச்சியிலும் சிறப்புற்று விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் அறிவுத்திறன்தான். இதனைத்தான் வள்ளுவரும்

> அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்

என்று கூறினார்.

அப்படி வளம் பெற்றுத் தரும் அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் தேர்ந்த கல்விப் பயிற்சியின் மூலமாக அல்லாது வேறு எந்த வகையிலும் பெற முடியாது. இதனைத் தான்

> " கல்வியினூ உங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை "

என்று நீதிநெறி விளக்கம் குறிப்பிடுகிறது.

இன்றைய நிலை

இன்றைய நிலையில், அதாவது 1967–68-ம் ஆண்டில் தமிழக அரசு, கல்வித் துறைக்கு மட்டும் ரூ. 54 கோடி ஒதுக்கியிருக்கிறது. ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றி யம், நகராட்சி மன்றம் போன்ற உள்ளாட்சி மன்றங்கள் ரூ. 4 கோடிக்கு மேல் செலவு செய்கின்றன. இது தவிர அறங்காப்பு நிலயங்கள் பலவும், அறம் புரியும் செல்வர் கள் பலரும் பலகோடி ரூபாய்களை பயன்படுத்துகிறார்கள். இவ்வளவு ஊக்கந் தந்தும், தமிழகம், கல்வியின் முழுப் பயனையும் பெற முடியவில்லை. கல்வியின் பயனைப் பெறு தவர்கள் இன்னமும் பெருவாரியினராகவே இருந்து வருகின்றனர். இன்னமும் தமிழகத்தில் நூற்றுக்கு 62 பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. 38 பேர்கள் தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்ற பட்டிய லுக்குள் வருகிறார்கள். இந்த 38 பேர்களிலும் 24 பேர்கள் ஐந்தாவது வகுப்புக்குள்ளாகவே தங்கள் படிப்பை முடித்துக் கொண்டவர்கள் ஆவார்கள், 14 பேர்கள் ஆறுவது வகுப்பிலே புகுந்து, பதினோராவது வகுப்பை தாண்டிக் கல்லூரியில் புகும்போது அவர்கள் 6 பேர்களாக குறைந்து விடுகிறார்கள். அந்த 6 பேர்களிலிருந்தும் இறுதியில் 2 பேர்கள்தாம் பட்டதாரிகளாக வெளியேறு கிறார்கள்.

1965–66-ம் ஆண்டில் 6-லிருந்து 11 வயதுக்குள்ளான துவக்கப்பள்ளி சிறுவர்-சிறுமியரில் 80·2 சதவிகிதத்தினர்தாம் பள்ளிகளிலே நுழைந்துள்ளனர். 11-லிருந்து 14 வயது வரையிலும் உள்ள உயர் துவக்கப்பள்ளி சிறுவர் சிறுமியரில் 32 சத விகிதத்தினரும், 14-லிருந்து 17 வயது வரையிலும் உள்ள உயர் நிலைப்பள்ளி மாணவர்களில் 17·9 சதவிகிதத்தினரும் 18-லிருந்து 23 வயது வரையிலும் உள்ள கல்லூரி மாணவர்களில் 2·3 சதவிகிதத்தினருமே கல்வி நிலயங்களில் நுழைந்து கல்வி கற்றனர்.

1961-ல் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் 97·85 சதவிகிதம், இரஷ்யாவில் 98·55 சதவிகிதம், பிரான்சில் 96·48 சதவிகிதம், சப்பானில் 97·85 சதவிகிதம் என்று இருக்கும்போது, இந்தியாவில் அத்தகையோரின் எண்ணிக்கை 24 சதவிகிதந்தான் என்று அறியும்போது நாம் கல்வித் துறையில் நமது நாட்டை எவ்வளவு முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பது தெளியப்பெறும். 1961-ம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவரின் சராசரி எண்ணிக்கை 24 சதவிகிதம் என்னும்போது தமிழகத்தின் எண்ணிக்கை 31 சதவிகிதம் ஆகும். கேரளத்தின் எண்ணிக்கைதான் 46 சதவிகிதமாக அமைந்து தமிழகத்தைவிட, சற்றுக் கூடுதலாகக் காட்டுகிறது. எழுதப்படிக்கத் தெரிந்தவர்களைக் கூடுதலாகப் பெற்றிருக்கிற வகையில், தமிழகம் மாநிலங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்றாலும், மேலும் விரைவில் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பினையும், வழியையும், வசதியையும் பெற்றுக் கொண்டு வருகிறது என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகும்.

எதிர்நோக்கியுள்ள பணி

தேர்ந்த கல்வி எல்லா நிலையிலும் வளரவேண்டும் என்ற ஆர்வம் தமிழகத்தில் எல்லோருக்கும் ஏற்பட்டிருப்பது பாராட்டி மகிழ்தற்குரியதாகும். ஆனால் ஆர்வம் வளர்ந்திருக்கிற அளவுக்கு வசதிகள் வளரவில்லை. இந்த ஆண்டில் கூட ஆறு வயதிற்கும் பதினொரு வயதிற்கும் இடைப்பட்டுள்ள சிறுவர் சிறுமியர்களில் 94 சதவிகிதத்தைத்தான் நாம் பள்ளியில் கொண்டு வந்து சேர்க்க முடிந்திருக்கிறது. இன்னமும் நம் கண்ணுக்கும் கைக்கும் அகப்படாமல் 100-க்கு ஆறு சிறுவர்-சிறுமியர்கள் எங்கேயோ அலைந்துகொண்டிருக்கிறார்கள். இன்னமும் துவக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய சிற்றூர்களும், உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய பெரு நகரங்களும், கல்லூரிகள் துவக்கப்பட வேண்டிய மாவட்டங்களும் பலவாக இருக்கின்றன. சிற்சில இடங்களில், ஆரம்பப் பள்ளிகளை ஆலமரத்திற்கடியிலும் அரசமரத்திற்கடியிலும் நடத்திக்கொண்டு வருகிறோம். சில இடங்களில் ஆரம்பப் பள்ளிகளை அரசமரத்தடிக்கு அனுப்பிவிட்டு, அங்கே உயர்நிலைப் பள்ளிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். இன்னும் சில இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளை வேறு இடங்களுக்கு அனுப்பிவிட்டு அங்கே கல்லூரிகளைத் துவக்கியிருக்கிறோம். வேறு சில இடங்களில் சத்திரம், சாவடிகளிலே கல்லூரிகளை வைத்திருக்கிறோம். இவையனைத்திற்கும், வசதியான கட்டடங்கள், வாய்ப்பான மாணவ விடுதிகள், ஆய்வுக் கூடங்கள், விளையாட்டரங்கங்கள், கலை மண்டபங்கள் தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஒழுங்குற நிறைவேற்றித்தர அரசு எடுத்துக் கொள்கிற முயற்சிகள் மட்டும் போதாது. பல அண்ணாமலை அரசர்களும் அழகப்பச் செட்டியார்களும், பச்சையப்ப முதலியார்களும் தேவைப்படுகிறார்கள்.

எதிர்காலத்தின் அறிகுறி

வசதிகள் நிரம்பப்பெற்ற நாடுகளில் எப்படிப்பட்ட கலையியல் அறிஞர்களையும், அறிவியல் வல்லுநர்களையும், ஆராய்ச்சிப் பெரியார்களையும், புகழ்மிக்க கண்டுபிடிப்பாளர்களையும் உருவாக்க முயலுகிறார்களோ, அப்படிப்பட்ட அறிஞர்களையும், வல்லுநர்களையும், ஆராய்ச்சியாளர்களையும், கண்டுபிடிப்பாளர்களையும், உருவாக்க ஏழ்மை நிரம்பிய நாட்டிலுள்ள நாமும் விரும்புகிறோம். அரசினர், பொது மக்கள் ஆகிய நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இடுக்கண்களையும் இடையூறுகளையும், இன்னல்களையும், இழப்புக்களையும், தொல்லைகளையும், துயரங்களையும் தாங்கிக்கொண்டு இயன்ற அளவு கல்வி வசதிகளை ஏற்படுத்தித் தந்தால்தான் பெறவேண்டிய வல்லுனர்களையும், கற்றறிவாளர்களையும், ஆராய்ச்சி அறிஞர்களையும் பெறமுடியும். பொதுவாகக் கல்வியால் பயன்பெற்று உயர்ந்தோர்களும், குறிப்பாக உதவிபெறும் கல்வியால் உயர்ந்தோர்களும், தாங்கள் ஈட்டும் பொருளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை தாங்கள் படித்த கல்வி நிலயத்திற்கோ அல்லது தாங்கள் பிறந்த ஊரிலுள்ள கல்வி நிலயத்திற்கோ அல்லது தாங்கள் வாழும் ஊரிலுள்ள கல்வி நிலயத்திற்கோ ஆண்டுதோறும் அறக்கொடையாக வழங்குவது என்ற பண்பாட்டை மேற்கொள்வார்களேயானால், தமிழகக் கல்வி நிலயங்கள் மேலும் மேலும் பல வசதிகளைப் பெறும் என்பது உறுதி. பெரும் சொத்துக்களை வைத்துக்கொண்டு எப்படிப்பட்ட அறச்செயல் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருப்போரும், பெரும் செல்வங்களை வைத்துக்கொண்டு வாரிசு இல்லாமல் என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருப்போரும் கல்விச் சாலைகளையே தங்கள் வளர்ப்புச் செல்வர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளைத் தமிழகமெங்கும் நான் கூறி வருகிறேன். கல்விச்சாலைகளுக்குக் கொடை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தமிழகமெங்கும் நான் கூறி வருகிறேன். கல்விச்சாலைகளுக்குக் கொடை வழங்கும் உணர்வோடு ஊருக்கு ஊர் புலவர் இப்போது முன்வரத் தொடங்கியிருப்பது நல்ல எதிர் காலத்தின் அறிகுறியாகும்.

கல்வியின் நோக்கம்

பண்டைக் காலந்தொட்டு இற்றைக் காலம்வரை பல்வேறு பேரறிஞர்கள் கல்வியின் நோக்கங்கள் பற்றிப் பல வகையாக எடுத்துக் கூறிவந்துள்ளனர். ஒவ்வொருவர் உள்ளத்திலும் இயற்கையாக உறைந்து கிடக்கும் அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும், வெளிப்படுத்தி, அவற்றைப் புறத்திலே காணப்படும் அறிவுத் திறன், ஆற்றல் திறன் ஆகியவற்றைக்கொண்டு வளர்த்து, அவற்றால் அவருக்கும், அவரைச் சேர்ந்தவர்களுக்கும், உலகத்திற்கும் பலன் ஏற்படுகிற

அளவுக்கு அவற்றை நிலைநிறுத்திக் கொள்வதே கல்வியின் பொதுவான நோக்கமாக இருக்கக் காண்கிறோம். அவற்றை எந்தெந்த நிலையில், எந்தெந்த வகையில் எந்தெந்த வழியில் எப்படியெப்படிப் பெறுவது என்பதிலே நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம், பல்கலைக் கழகத்துக்குப் பல்கலைக்கழகம் சிறிது வேறுபாடு இருக்கிறது. முறை எப்படியாக இருந்தாலும், இறுதியில் ஒவ்வொருவரும் கல்வி கற்றதனால் பெற்ற அறிவுத் திறன் என்ன? ஆற்றல் திறன் என்ன? பண்பாடு என்ன? என்பதைத்தான் உலகம் எதிர்பார்க்கிறது. அந்த வகையில், தமிழகத்திலுள்ள பல்கலைக் கழகங்கள், குறிப்பாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், நல்ல தரமும், திறமையும் மிக்க மாணவியர்—மாணவர்களை உருவாக்கி வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

பொதுவாக இந்திய நாட்டின் எதிர்காலம், குறிப்பாகத் தமிழகத்தின் எதிர்காலம் மிகச் சிறந்து விளங்க வேண்டுமென்றால், அது இந்தத் தலைமுறையைச் சார்ந்த மாணவியர்—மாணவர்கள் கையில்தான் இருக்கிறது. இன்றைய மாணவிய மாணவர்கள் பொறுப்புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும், கட்டுப்பாட்டுணர்ச்சியோடும் நிலைநாட்டும் அறிவுத் திறமும் ஆற்றல் திறனும்தான் புதிய தமிழகத்தை உருவாக்கித் தரவேண்டும்.

திருப்பு முனை

தமிழகத்தின் நில வளமும், நீர் வளமும், மலை வளமும், சோலை வளமும், மக்களுக்குக் குறைவறப் பயன்பட வேண்டும்; இயற்கை வளங்களைப் பயன்படும் செயற்கை வளங்களாக மாற்றும் வகை காணவேண்டும்; புதைந்து கிடக்கின்ற கனிச் செல்வங்கள் வெளிவர வேண்டும்; அவற்றைக் கொண்டு ஆக்கம் தரும் உற்பத்தி மிகவேண்டும்; அவற்றின் மூலம் தமிழகம் தன்னிறைவு பெறவேண்டும்; தன்னிறைவுக்கு மேல் எஞ்சிய பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படவேண்டும்; இறக்குமதியின் அளவு குறைக்கப்பட வேண்டும்; நாட்டின் பொது வருமானம் மிகவேண்டும். மிகுவதின் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்; வாழ்க்கைத் தரம் உயர்வதன் மூலம் வயிறார உண்ண உணவும், மனமார உடுக்க உடையும், தேவையார இருக்க இடமும் கிடைக்க வேண்டும்; அறிவாரக் கல்வி வேண்டும்; வேலை வாய்ப்பு வேண்டும்; ஓய்வு நேரம் வேண்டும்; ஓய்வு நேரத்தில் நுகர்வதற்கான இன்பப் பற்றுக்கோடுகள் வேண்டும்; இவற்றையெல்லாம் நிறைவேற்றித் தரக்கூடிய புதிய தமிழகத்தை உருவாக்கித் தரவேண்டும் என்று பொறுப்புணர்ச்சியும், கடமையுணர்ச்சியும் மிக்க மாணவியர்—மாணவர்களிடத்தில் வேண்டுகோள் விடுக்கவே இந்த விழாவிற்கு நான் வருகை தந்துள்ளேன். அறிவுரை கூறும் அளவுக்கு ஆற்றல் உடையேனல்லேன் என்றாலும், வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்தக் கடமையை ஆற்ற இந்த விழா பயன்படுவது எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த மாணவியர்—மாணவர்களுக்கு இருந்த கடமைகள், பொறுப்புக்களைவிட, முப்பது ஆண்டுகளுக்குப் பின்னால் வரவிருக்கிற மாணவியர்—மாணவர்களுக்கு இருக்கப்போகிற கடமைகள், பொறுப்புக்களைவிட இந்தத் தலைமுறையைச் சார்ந்த மாணவியர்—மாணவர்களுக்கு இருக்கிற கடமைகளும் பொறுப்புக்களும் மிகையானவையும், முக்கியமானவையுமாகும். இந்தத் தலைமுறையைச் சார்ந்தவர்கள் ஒரு திருப்பு முனையில் நிற்கின்றார்கள். இந்தத் தலைமுறையைச் சார்ந்தவர்கள் திருப்பிவிடுகின்ற வழியிலேதான், தமிழகம் இன்னும் பல நூற்றாண்டுக் காலத்திற்கு உருண்டோட வேண்டும்.

தமிழக மக்கள் தாம் அறிந்துகொள்ள வேண்டியவைகள், புரிந்துகொள்ள வேண்டியவைகள் அனைத்தையும் தங்கள் தாய்மொழியான தமிழிலேயே இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அப்படி எதிர்பார்ப்பது தவறு என்று எவரும் கூறமாட்டார்கள். அப்படித்தான் ஆங்கிலேய நாட்டிலுள்ள ஆங்கிலேயர்களும், சப்பான் நாட்டிலுள்ள சப்பானியர்களும், இரஷ்ய நாட்டிலுள்ள இரஷ்யர்களும், இத்தாலிய நாட்டிலுள்ள இத்தாலியர்களும் தத்தம் மொழியிலேயே இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். தமிழகத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தாங்களும், தங்கள் பிள்ளைகளும் பெறும் கல்வி அறிவு தமிழின் மூலமே கிடைக்கப் பெறவேண்டும் என்றும், தங்களின் பண்டமாற்று, நீதிமன்றம், சட்டமன்றம், ஆட்சித்துறை, அலுவலகம் ஆகிய அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆவலை நிறைவேற்றுவது, இன்றைய வருங்காலக் கல்வியாளர்களின் நீங்காத கடமையாகும்.

நமது குறிக்கோள்

இந்த ஆவலை நிறைவேற்றித் தரும் அளவுக்கு அறிவும், ஆற்றலும் நாம் பெற்றிருக்கிறோமா? தமிழ் மொழி பெற்றிருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. போதுமான அளவுக்குப் பெறவில்லை என்பதுதான் இப்போது விடையாக இருக்கிறது. அடுத்து, உடனடியாகப் பெற்றுவிடமுடியுமா? என்ற கேள்வி எழுகிறது. உடனடியாகப் பெற்றுவிட முடியாது, மெல்ல மெல்ல, படிப்படியாகத்தான் பெற முடியும்; பெற வேண்டும் என்பது விடையாக அமைகிறது. இன்றைய வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படுகின்ற அறிவாற்றல் அத்தனையையும் தமிழால் பெற முடியுமா? என்றால், முழுவதும் முடியாது என்பதுதான் விடையாக இருக்கிறது. இன்றைய நிலையில், தமிழால் பெறக்கூடிய எல்லாவற்றையும் பெற்று, தமிழால் பெற முடியாததை வேறு எந்த மொழி மூலம் பெறுவது என்ற கேள்வி எழுகிறது. இதற்கான விடை அளிக்கும்போதுதான், அதற்கான தகுதி, திறமை அத்தனையும் ஆங்கில மொழி ஒன்றுக்கே அமைந்திருக்கின்றன என்ற முடிவுக்கு இன்றைய தமிழக அரசும், தமிழக அறிஞர்கள் பலரும் வந்திருக்கின்றனர்.

தமிழன் தமிழனோடு பழக, உரையாட, தொடர்பு கொள்ள, வாணிபம் செய்ய, ஆட்சி நடத்த, கலை பயில, பாடம் அறிய, தமிழன் தமிழனுக்கு உணர்ச்சிகளை அறிவிக்க, தெரிவிக்க, வாழ்க்கையை வளப்படுத்த, வகைப்படுத்த, தமிழைக்கொண்டு வாழ முடியும்

என்பதும், எந்த இடத்தில், எந்தக் கட்டத்தில் எந்த நிலையில் தமிழைக்கொண்டு பணியாற்ற முடியவில்லையோ அந்த இடத்தில், கட்டத்தில், நிலையில் ஆங்கிலத்தின் முழு உதவியையும், ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். தமிழ் அல்லாத பிறமொழி பேசும் மக்களிடமும், பிற நாட்டிடமும் தொடர்பு கொள்ளவும், உலக வாணிபத் தொடர்பு கொள்ளவும், உலக அறிவியல் அறியவும், உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் மொழி, கலை, நாகரீகம், பண்பு, பழக்க வழக்கம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும் ஆங்கில மொழிதான் பயன்படும் கருவியாக இருந்து வருகிறது; இருந்து வர முடிகிறது. அது ஒன்றுதான் உலகப் பொது மொழியாகவும் இலங்குகிறது. உலகில் எந்த மூலையில் எந்த முடுக்கில் என்ன நிகழ்ச்சி நடைபெற்றாலும், உடனே உலகுக்கு அறிவிக்கும் மொழி ஆங்கிலமேயாகும் ; உலகில் எந்த நாட்டில், எந்த அறிவியல் அறிஞர், எந்தக் கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்தாலும், அடுத்த நொடியிலே உலகிற்கு அறிவிக்கும் மொழி ஆங்கிலமேயாகும் ; உலகில் எந்த நாட்டில், எந்த மொழியில் சிறந்த இலக்கியங்கள், அறிவியல் நூல்கள், கலையியல் நூல்கள் இருந்தாலும், தோன்றினாலும் அவற்றையெல்லாம் உடனுக்குடன் மொழிபெயர்த்து உலக முழுமைக்கும் அறிவிக்கும் மொழி ஆங்கிலமேயாகும். நம் தாய் மொழியான தமிழ், எல்லாத் துறை பற்றிய அறிவையும் பெற்று, அவற்றையெல்லாம் விளக்கிக் காட்டும் ஆற்றலோடு விளங்கவேண்டுமாயின், அதற்கு ஆங்கிலம்தான் உறு துணை புரியக்கூடிய மொழியாகும்.

ஆங்கிலத்தின் பயன்

சுருங்கச் சொல்ல வேண்டுமானால், தமிழன் பெற வேண்டிய அறிவுத்திறனும், ஆற்றல் திறனும், உலகிலுள்ள எந்த நாட்டின் அறிவுத் திறனுக்கும் ஆற்றல் திறனுக்கும் எந்த வகையிலும் குறைந்திருக்கக்கூடாது. அத்தகைய அறிவுத்திறன், ஆற்றல்திறன் முழுமையும் பெற்றுத்தர இன்றைய நிலையில் தமிழ்மொழி ஆற்றல் பெற்றதாக இல்லை. அந்த ஆற்றலைப் பெறக்கூடிய மொழிதான் என்றாலும், இன்றைய நிலையில் பெற்றிருக்கவில்லை. தமிழின் மூலம் பெறக்கூடிய அறிவு ஆற்றல் எல்லாம் பெற்று, மேற்கொண்டு பெற வேண்டியவை முழுவதையும் ஆங்கில மொழியின் துணையுடன் பெற முயலுவதுதான் நம்முடைய நோக்கத்தை ஈடேற்றும் செயலாக இருக்க முடியும். தமிழும் ஆங்கிலமும் கூட்டாகச் சேர்ந்து பயன்படும் நிலை ஏற்பட்டுவிட்டால், பிறகு எந்த ஒரு அறிவுக்கும், எந்த ஒரு மொழியிடத்திலும் ஏங்கி நிற்க வேண்டிய நிலை தமிழகத்தில் தமிழர்களுக்கு ஏற்படாது. தமிழும், தமிழகமும் தமிழக மக்களும் ஆங்கிலத்தின் தொடர்பையும் தோழமையையும் சில நூற்றாண்டுகளாகவே பெற்று வருவது நமது நோக்கத்தை எளிதில் நிறைவேற்றக் காரணமாக அமைகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழக மக்களுக்கு அகத் தொடர்புக்குத் தமிழும், புறத் தொடர்புக்கு ஆங்கிலமும், இயன்ற வகைக்கெல்லாம் தமிழும், இயலாத வகைக்கெல்லாம் ஆங்கிலமும் என்ற முறையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழி அறிவு என்றென்றும் அமைவது வேண்டற்பாலதாகும்.

மற்றொரு கடமை

பள்ளி இறுதி வகுப்பில் படித்து முடித்துவிட்டுக் கல்லூரி புகுகின்ற ஒவ்வொரு மாணவிய—மாணவரும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் பேசவும், எழுதவும் விளங்கிக்கொள்ளவும், புரிய வைக்கவுமான ஆற்றலைப் பெற வேண்டுமென்பதுதான் நம்முடைய முக்கிய நோக்கமாகும்.

தமிழகக் கல்வி நிலையங்களுக்கெல்லாம் இரண்டுவிதக் கட்டுப்பாடுகள், மொழி வளர்ச்சியைப் பற்றி ஏற்படுகின்றன. தேவைப்படும் பாட நூல்களையும், பொது நூல்களையும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் மக்களுக்கு பயில்வதற்குப் பயன்படும்படிச் செய்ய வேண்டியது ஒரு கடமையாகும். தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஆங்கில மொழி படித்தவர்களாக ஆக்கி, உலகத்திலுள்ள ஆங்கில நூல்கள், ஏடுகள், இதழ்கள், ஆகிய அத்தனையையும் படித்தறிந்து, தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் திறம்படைத்தவர்களாக ஆக்குவது மற்றொரு கடமையாகும். அதாவது ஆங்கில நூல்களை ஒரு பக்கம் தமிழ் மயமாக ஆக்குவதும்; மற்றொரு பக்கம் தமிழக மாணவிய—மாணவர்களை ஆங்கில அறிவு படைத்தவர்களாக ஆக்குவதும் ஆகும். தமிழில் புதிய புதிய, கண்டுபிடிப்புக்களும் ஆராய்ச்சிக் கருத்துக்களும், தொழில் நுட்பக் கருத்துக்களும், அறிவியல் கருத்துக்களும் தோன்ற வேண்டுமென்றால், ஆங்கில மொழி அறிவு பெரிதும் துணை நிற்க வேண்டும். தமிழில் சிறந்த ஆராய்ச்சி நூல்களைத் தந்திருக்கின்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பேராசிரியர் மறைமலையடிகள், பேராசிரியர் கா. சு. பிள்ளை, பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, பேராசிரியர் வரதராசனார், பேராசிரியர் இராசமாணிக்கனார், பேராசிரியர் தேவநேயப்பாவாணர் போன்றோர்கள் எல்லாம் சிறந்த ஆங்கில அறிவுப் படைத்தவர்கள் என்பதை ஈண்டு நினைவுப்படுத்திக் கொள்வது பொருத்தமுடையதாகும்.

புதுமைக் கவி பாரதியார் அவர்களும்,

> "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
> தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
> இறவாத புகழுடைய புது நூல்கள்
> தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்."

என்று அழுத்தந் திருத்தமாக வலியுறுத்திக் கூறியிருப்பது இங்குக் கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும்.

நம்முன் உள்ள பிரச்சினை

இப்பொழுது மொழித் துறையில் ஒரு சிக்கல் ஏற்பட்டிருப்பதற்கு காரணம், இந்தியா முழுவதிலும் ஆங்கிலத்தின் இடத்தை, எல்லா வகையிலும் இந்தி மொழிக்கு ஏற்படுத்தித் தர ஒரு சிலர் முயன்று வருவதேயாகும். அவர்கள் கட்சி ஆதிக்கத்தின் துணைகொண்டும், இந்தியப் பேரரசின் அதிகாரத்தின் துணைகொண்டும் அந்த

நோக்கத்தை நிலை நாட்ட முயலுகிறார்கள். இப்பொழுது ஆங்கிலம் உலகத் தொடர்பு மொழியாகவும் இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாகவும் இந்தியாவின் பொது மொழியாகவும் மாநிலங்களிடையே தொடர்பு மொழியாகவும், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கு மிடையே இணைப்பு மொழியாகவும், மாநில அரசின் ஆட்சி மொழியாகவும் பல்கலைக் கழக உயர்மட்டப் பாட மொழியாகவும் இருந்து வருகிறது. ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தப் பொறுப்புமிக்க இடங்களைக் கைப்பற்றும் தகுதி, இந்தி மொழிக்கு அறவே இல்லை என்பதுதான் பேரறிஞர் பலரின் துணிந்த முடிவாகும். உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி ஒருநாளும் பெற முடியாது என்பது எளிதாக உணரக் கூடிய தொன்றாகும். அகில இந்திய ஆட்சி மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி அந்த இடத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று சொல்வதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று, ஆங்கிலம் அந்நிய மொழி என்பது; இரண்டாவது, இந்தி இந்தியாவில் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழி என்பதாகும். இந்தி என்ற சொல் தோன்றிய இடம் அரபு நாடாக இருந்தாலும் அது எப்படி இந்தியாவின் மொழியாக ஆகிவிட்டதோ, அதுபோலவே ஆங்கிலம் தோன்றிய இடம் இங்கிலாந்தாக இருந்தாலும், அது இந்திய மொழிகளில் ஒன்றாக ஆகிவிட்டது. இந்தியாவைத் தாயகமாகக் கொண்டு இந்தியாவின் முழுக் குடி உரிமை கொண்ட மக்களாக வாழும் ஆங்கிலோ—இந்தியரின் தாய்மொழி இன்று ஆங்கிலமாகவே இருந்து வருகிறது. அந்த வகையில் இந்தியாவில் குடியேறி, இந்தியாவை வாழும் இடமாகக் கொண்டுவிட்ட மொழிகளில் ஆங்கில மொழியும் ஒன்றாகிவிட்டது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் முன்பே இடம் பெற்றுவிட்ட 15 முக்கிய மொழிகளோடு, பதினாறாவது முக்கிய மொழியாகச் சேர்த்துக் கொள்ளப்படத்தக்க எல்லாத் தகுதியும் ஆங்கிலத்திற்கு இருக்கிறது. எனவே, அது அந்நிய நாட்டிலிருந்து வந்த மொழி என்ற முறையில் அதைத் தள்ளிவிட ஒரு காரணமும் இல்லை. ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளில், இந்தியா முழுவதும் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் பரவலாகப் பலர்க்கும் அறிந்து, தெரிந்து, பழகி இருக்கும் மொழி ஆங்கிலமேயாகும். இந்தி, இந்தியாவின் மத்தியப் பகுதியில் உள்ள நான்கு மாநிலங்களில் மட்டுமே, அதுவும் 80-க்கும் மேற்பட்ட வகையாகப் பிரிந்து, பயன்பட்டு வரும் மொழியாகும். இந்தி பேசாத மாநிலங்களில் ஆங்கிலத்தை அறிந்திருப்பவர்கள் அளவுக்கு இந்தியை அறிவார் இலர். 1965-ஆம் ஆண்டு கணக்குப்படி இந்தியா முழுவதும்16·58 இலட்சம் ஆங்கில நாளிதழ்கள் படிக்கப்படுவதும், இந்தி நாளிதழ்கள் 8·57 இலட்சமே படிக்கப்படுவதும் ஆன நிலைமை, அறிவாற்றல் கொண்டுள்ளவர்களிடத்திலே ஆங்கில மொழிதான் மிகவாக ஆட்சி செலுத்தி வருகிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. மேலும், இந்தியாவிலுள்ள பல்வேறு மொழி பேசும் பல்வேறு மாநிலத்தாரையும் சமமாக நடத்தி, அவர்களுக்கு பேரறிவும், பேராற்றலும் தந்து அவர்களிடையே ஒற்றுமையையும், உறவையும் வளர்த்து வரக்கூடிய தகுதி ஆங்கிலத்தினிடத்தில்தான் அமைந்திருக்கிறது. அந்தத் தகுதியை இந்தியிடத்தில் ஒரு நாளும் எதிர்பார்ப்பதற்கில்லை. பரவலாக வழங்கும் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும் தகுதி பெற்றிருக்கிற காரணத்தாலேயே, அதுவே மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையே இணைப்பு மொழியாகவும், மாநிலத்திற்கும் மாநிலத்திற்கும் இடையே இருக்கக்கூடிய தொடர்பு மொழியாகவும் இருக்கத் தகுதி படைத்ததாகும். இந்தி பேசுகிற மாநிலத்தில்கூட, ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு, வெறும் ஆற்றலற்ற இந்தியை மட்டுமே வைத்துக்கொண்டு வாழ்ந்துவிட முடியாது; வாழ்ந்துவிடப்போவதில்லை. எப்படியும், உலகத் தொடர்புக்கு, அறிவியல் அறிவிற்கு, தொழில் நுட்ப அறிவிற்கு, அவர்கள் ஆங்கிலத்தைப் படித்தே தீரப் போகிறார்கள். ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாகவே தொடர்பு மொழியாகவே என்றென்றும் இருப்பது அவர்களுக்கும் எளிதாகப் பயன்படக் கூடிய ஒரு வாய்ப்பாகும். மாநில வாழ்வை நடத்திக் கொள்ள தமிழ் எப்படி தமிழர்களுக்குப் பயன்படவேண்டும் என்று நாம் கருதுகிறோமோ, அப்படியே இந்தியை அவர்களுடைய மாநில வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ள அவர்களுக்கு எல்லா வாய்ப்பும் இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்தியைப் பிற மாநிலங்களில் திணிக்க வேண்டிய இன்றியமையாமை அவர்களுக்கும் இல்லை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை நமக்கும் இல்லை. மாநில அளவிலும், மத்திய அளவிலும் இந்தியாவின் முக்கிய மொழிகள் அனைத்துக்கும் ஒரேபடியான மதிப்பும், ஆதரவும், வசதியும், வாய்ப்பும் அளிக்கப்படவேண்டுமே யல்லாது, அவற்றையெல்லாம் இந்திக்கு மட்டும் அளிக்கும் முயற்சி முறையாகாது, நீதியாகாது, நேர்மையாகாது.

மொழிக் கொள்கை

தமிழ் மாநிலத்தில் ஆங்கிலத்தின் இடத்தை எல்லா வகையிலும் பெற்றுக்கொள்ளும் முழு உரிமை தமிழ் மொழிக்குத்தான் உண்டேயல்லாமல் இந்தி மொழிக்கு எள்ளளவும் இல்லை. சுருங்கச் சொன்னால், தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாணவியரும், மாணவரும் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிப் பயிற்சியிலும் வல்லவர்களாகவே இருக்க வேண்டும்; தனிப்பட்டவர்கள் தத்தம் விருப்பத்திற் கிணங்க வேறு எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம் என்பதுதான் மொழியைப் பொறுத்துக் கடைப்பிடிக்கக் கூடிய கொள்கையாகும்.

மொழித்துறையில் நாம் தெளிவான கொள்கையை மேற்கொண்டான பிறகு, அந்த மொழியின் மூலம் பெறும் அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் தொழில் வளர்ச்சிக்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும், நாடு தன்னிறைவு பெறுவதற்கும் பயன்படுத்தவேண்டியது இந்தத் தலைமுறையைச் சார்ந்த மாணவிய மாணவர்களின் கடமை ஆகிறது.

நமது நாட்டில் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிற மக்கள்தாம் ஏராளம். நூற்றுக்கு எழுபதுக்கு மேல் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தத்

தொழிலுக்கு அடுத்தபடியாக, பெரும்பான்மையினர் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தொழில்களும் நாட்டின் பொருளாதாரத்தை விரைவாகவும் பன்மடங்காகவும் பெருக்கா. இந்தத் தொழில்களில் ஈடுபட்டிருப்போரை, மெல்லமெல்லப் டொறியியல், தொழில் துறைகளுக்கு ஈர்த்துப் பல்வேறு வகைப் பொருள் உற்பத்தியைப் பெருக்கும் வழி கண்டால்தான், நாட்டின் பொருளாதாரம் பன்மடங்கு உயர வழி ஏற்படும். வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய எண்ணிக்கையை ஒருபுறம் நாளுக்கு நாள் குறைத்து, மற்றொருபுறம் அதன் உற்பத்தியைப் பெருக்க நாம் முயலவேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான அறிவையும், ஆற்றலையும் நாட்டிற்குத் தர வல்லவர்கள் நீங்கள் தான்.

> "நாடென்ப நாடா வளத்தன ; நாடல்ல
> நாட வளந்தரும் நாடு."

என்று வள்ளுவர் கூறிய இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாகத் தமிழகத்தை ஆக்க வேண்டிய பெரும் பொருப்பும், கடமையும் உங்கள் கையிலேதான் உள்ளன. அவற்றைத்தான் உங்களிடத்திலே தமிழக அரசும், தமிழ் நாடும் பெரிதும் எதிர்பார்க்கின்றன. நீங்கள் பேரறிவும், பேராற்றலும் பெற்று, உங்கள் குடிப்பெயரை உயர்த்தி, நீங்கள் பயிலும் பல்கலைக்கழகத்திற்குப் பெயரையும், புகழையும் ஏற்படுத்தித் தந்து, நீங்கள் பிறந்த நாட்டிற்கு பெருமையையும் பொலிவையும் உருவாக்கிக் கொடுத்து, சிறப்புற்று வாழ்வீர்களாக என்று நான் மனதார, வாயார வாழ்த்துகிறேன். உங்களுக்கும் எனக்கும் கல்வித் தாயகமாக விளங்கும் இந்தப் பல்கலைக் கழகம் என்றென்றும் சிறப்புற்று, ஓங்கு புகழ் எய்தி வாழ்வதாக. அண்ணாமலை அரசரின் பெயரும் புகழும் என்றென்றும் உலகில் நின்று நிலவுவனவாகுக. இந்தப் பல்கலைக் கழகத்தை மேலும் மேலும் பல்வேறு வகைகளில் வளர்க்க ஆர்வம் கொண்டுள்ள செட்டிநாட்டரசர், உயர்திரு முத்தையா செட்டியார் அவர்களுடைய முயற்சி மேலும் மேலும் வளர்க. இந்தப் பல்கலைக் கழகத்தினிடத்தில் அக்கறை கொண்டு ஆர்வத்தோடு உழைக்கும் அனைவரின் தொண்டும் வெல்க. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறியதற்கிணங்க,

> "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
> மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்று முழங்கி விடை பெறுகிறேன். வணக்கம்.

Don't Spend Your Enhanced Emoluments

CONTRIBUTE TO SMALL SAVINGS

AND

SAVE FOR A PURPOSE YOU CAN PROVIDE

FOR

Your Child's Education Start in Life or Marriage
Your Retirement needs or Building a House

BY REGULAR MONTHLY SAVINGS WISELY INVESTED IN THE

NEW CUMULATIVE TIME DEPOSIT SCHEME

Through **PAY ROLL** *Enquire at* **ANY POST OFFICE**

OR

Contact :

DIRECTOR OF SMALL SAVINGS
Fort St. George, Madras-9

OR

REGIONAL DIRECTOR OF NATIONAL SAVINGS
1/18, Mount Road, Madras-2

Phones : **22871 — 29236 — 85962**

BRIGADE'S

march towards Prosperity

The aim of the Prosperity Brigade is to provide an opportunity for all those who are eager to work for the common good of the society in their spare time. With this intention it is being inaugurated in every district. The work done by the members of the Prosperity Brigade in Madras, and other districts where it has already started functioning is encouraging. The Prosperity Brigade takes up all kinds of work such as the construction of school buildings, laying of roads, digging of canals, reclamation of waste lands for cultivation and so on. By undertaking such constructive programmes with enthusiasm the members of the Brigade are helping for the progress and welfare of the society. So far, in Madras, Tiruchirappalli and Chingleput districts they have completed various schemes of public utility. The value of the work done by them comes to about Rs. 94,000. People of the respective regions where the works have been done are enjoying the benefits that accrue from it. The nature of work done in the above three districts are given below in detail :—

MADRAS CITY.—Works completed by the Prosperity Brigade in Madras are as follows : A street cleaning campaign was inaugurated and street cleaning was done in 12 Divisions. In Mylapore the members of the Prosperity Brigade laid two furlongs of the Bazaar Road. The value of the work is Rs. 500. They have constructed a school building valued at Rs. 32,000 at Shastri Nagar. The Government has spent only Rs. 4,000 for this purpose. A drainage estimated to cost Rs. 14,000 was completed at Kalyanapuram in Vyasarpadi. At West Mambalam about two furlongs of road worth Rs. 500 was completed. Altogether the value of the works done in Madras work out to Rs. 47,000.

Construction of a public platform—Prosperity Brigade auditorium and laying of six roads in West Mambalam are some of the works to be undertaken in the City in the future.

TIRUCHIRAPPALLI.—Work done by the Prosperity Brigade in Tiruchirappalli district—

Name of the village.	*Nature of work done.*	*Number of persons engaged.*	*Value of the work*
(1)	(2)	(3)	(4)
			RS.
Ambukoil, Karambakudi Panchayat Union.	Breaches in the banks of the irrigation canal of the river Agniyam rectified.	25	500
River Nariyaru of Karambakudi Panchayat Union.	Construction of a canal to divert the waters of Nariyaru to a Government tank.	25	750
Kilarasur, Pullambadi Panchayat Union..	Flood control through the construction of a canal of 350′ and 600 ′ bank.	20	1,500
Do.	Flood control work	25	250
Cendurai, Cendurai Panchayat Union ..	Construction of 60′ breach in the lake ..	20	200
Edamalaipudur, Manikandam Panchayat Union.	Construction of breach in Kollankulam lake.	10	150
Kaduvetan Kurichi, T. Pazhur Panchayat Union.	Desilting of the village tank	20	400
Manakudi, Ariyalur Panchayat Union ..	Construction of the breaches in the big lake and flood control work which brought under cultivation 60 acres.	30	1,000

Name of the village.	Nature of work done.	Number of persons engaged.	Value of the work.
(1)	(2)	(3)	(4)
			RS.
Thevayar village, Veppanthattai Panchayat Union.	Repair work on the 7 furlong supply canal of Ranjankudi lake.	30	1,500
Annankaran Pettai, Udanganni Panchayat, T. Pazhur Panchayat Union.	Construction of a school with donated materials.	20	500
Vellalapathi, Thathiyangar Panchayat Union.	Construction of a school	20	1,500
Chinna Koundanur, Aravakurichi Panchayat Union.	Construction of a shed for midday meals scheme at Elementary School.	15	300
Thiruthiamalai, Musiri Panchayat Union.	Construction of a shed with mud walls and grass roof.	20	500
Mayanur, Krishnarayapuram Panchayat Union.	Repairing of one furlong road from Mayanur to Renganathapuram and cleaning of cremation ground.	16	200
Thanjavur, Samuthiram Panchayat, Arimalam Panchayat Union.	Repairing of one mile road from Pudukottai Embal High Road.	30	125
Pudalur, Aluthur Panchayat Union ..	Laying of two furlong new road	25	700
Lappaikudikadu, Veppur Panchayat Union.	Repairing of road leading to Public Health Centre newly opened in the village.	20	170
Marungapuri Panchayat Union	Laying of a mile new road from Thuvarankurichi to Ponnampatti.	25	1,000
Uppidiamangalam, Thanthoni Panchayat Union.	Laying of a three furlong road from Lakshmanapatti to Karuppur.	30	1,500
Illupur Ennai Panchayats, Annavasal Panchayat Union.	Laying of a two furlong road at Illupur Ennai Panchayats.	30	500
Krishnarayapuram Panchayat Union ..	Laying 1½ mile road from Kovalam to Koilpatti.	21	300
Manaparai Panchayat Union	Cleaning of five streets in Manaparai drainage and Harijan Colony.	25	200
Perambalur Panchayat Union Farm ..	Levelling, bund irrigation canal, etc., formation and transplantation of chillies in 25 cents.	30	200
Haiyampatti Panchayat Union	Green manure seed planting in the Office compound.	20	160
Do.	Digging of pits for planting coconut seedlings and preparation of 10 cents of land for vegetable cultivation.	20	100
Kudumiamalai, Annavasal Panchayat Union.	Construction of banks for the irrigation tank of the Government Seed Farm at Kudumiamalai.	100	2,500
K. Paramathi Panchayat Union	Preparation of land for garden in the premises of the Panchayat Union Office.	30	6,000

Estimated value of the work done in Tiruchirappalli district is Rs. 22,705.

CHINGLEPUT DISTRICT.—Work done by the Prosperity Brigade in Chingleput district—

Name of Panchayat Union.	*Nature of work undertaken.*	*Number of persons engaged.*	*Value of the work.*
(1)	(2)	(3)	(4)
			RS.
Achirupakkam	Kizhanur sub-canal	25	750
Villivakkam	Avathur school building	60	950
Sozhavaram	Alamathi school building	..	500
Kadambathur	Repairing of Kadambathur–Vidayar road ..	..	1,500
Kummidipoondi	Laying of two miles road from Chunnanbukulam to Ubasamuthiram.	50	3,000
Tiruvallur	Laying of four furlongs road for Raethur housing colony.	50	3,000
Maduranthagam	Repairing of road at Madhuranthagam ..	200	3,000
Thirukazhikundram..	Laying of ½ mile Kalpathi Vembakkam village.	50	3,000
Lathur	Anaikkattu Village Road	..	400
Kunrathur	(1) Preparation Adancheri school garden .. (2) Ezuchur sub-canal	..	2,000
Pallipattu	Repairing of Sorakapet Road	..	..
Wallajabad	School building	..	6,000

Estimated value of the work done in Chingleput district is Rs. 24,100.



A meeting of the volunteers of the Prosperity Brigade, Madras City, was held at the Children's Theatre on 10th December 1967, to discuss ways about utilising them for Family Planning work, Thiru M. Muthusamy, Minister for Local Administration, presided. Dr. S. Chandrashekar, Union Minister of State for Health and Family Planning, is addressing the gathering.

MUNICIPAL



ADMINISTRATION

AT THE CROSS ROADS

THIRU M. MUTHUSWAMY,
Minister for Local Administration

Mr. Chairman and Fellow Delegates,

It gives me great pleasure to welcome all the distinguished delegates from the Union Government and the various State Governments for this Seminar. It was a happy and wise thought to have arranged for a Seminar on Municipal administration. I am certain that Jefferson must have had in mind local self-Government when he said—

> "We must dream of an aristocracy of achievements arising out of a democracy of opportunities."

We, in this State, have been running Municipal administration for over a 100 years. Other States would have had similar experiences. We would, therefore, be in a position to compare notes. Municipal administration began with certain objectives, a hundred years ago. Broadly speaking, they were expected to look after education, communication, public health amenities. In the early days, the Police functions were also vested in them. Over a period of years they have shed the Police functions. This was perhaps wise. In certain other areas, they were not able to fulfil the needs of the community in regard to some of the functions. We have, therefore, an opportunity, now, to assess how far Municipalities have been able to fulfil the objectives for which they were first constituted.

Stalwarts

Municipalities have been serving under several disabilities. We can take stock of these disabilities and see if we can do anything to remedy them.

Municipal administration has produced a number of stalwarts. Some of us remember the significant contribution made and the distinguished services rendered by such great Chairmen as Thiru Rathinasabapathi Mudaliar of Coimbatore, Thiru Vedachala Mudaliar of Chingleput, Thiru Daniel Thomas of Palayamkottai, Thiru P. R. Thevar of Tiruchirappalli and others, equally illustrious. I should also particularly mention that our beloved Rajaji started his political carrier as the Chairman of the Salem Municipality. Nearer home, we have Sir P. Thiagaraja Chetty who was the President of the Madras Corporation. In this connection, I would like to draw pointed attention to the fact that Thiru Sarathi of Vellore, Thiru Narasimhan of Arani, Thiru Subbaraja of Rajapalayam, Thiru Kasiraman of Kumbakonam, Thiru Chinna Raju Gounder of Tirupathur, Thiru Soundara Barathi of Aruppukkottai and Thiru Habibulla Baig, who is the Mayor of Madras, are also Members of the Legislative Assembly. Thiru Sadiq Pasha, the present Minister for Health to the Government of Madras was Chairman of the Udamalpet Municipality. Finally, I would like to make specific mention of Thiru Sivagaminatha Pillai of Srivilliputhur who has been associated with Srivilliputhur Municipality for a continuous period of 40 years and who is a member of our delegation to the Seminar. We have been specially lucky in having such men amongst us. The keen interest that they took has resulted in the development of sound Municipal administration over the length and breadth of this State Work in Municipal Councils, has given a large number of men, some of whom are mentioned above, a chance to serve the public in other exalted positions in the State Government at a later stage in their career. The ideals sustaining these brilliant Municipal administrators is brought out clearly in the ancient Tamil Classical anthology of "*Pura Nanuru*"—

> "உண்டால் அம்ம இவ்வுலகம்.....
>
> ....
>
> தமக்கென முயலா நோன்றாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மையானே."
>
> ("புறநானூறு")

[The world continues to exist, because there are people who toil, not for their own good, but toil tirelessly for the welfare of others.]

